# ஏமாற்று வித்தை

அது ஒரு பெரிய ஆலமரம். அந்த ஆலமரத்தில் ஆண் காகமும், பெண்காகமும் கூடுகட்டி வாழ்ந்தன. பெண்காகம் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது.



ஒரு நாள் காகக்குஞ்சுகள் நோய்வாய்ப்பட்டன. பெண்காகம் அழுதது. ஆண்காகம் பெண்காகத்தைப் பார்த்து "அழாதே" என்று கூறியது. அதன் பின் இரைதேடச் சென்றது.

பெண்காகம் ஆலமரததின் கீழ் பூனை ஒன்றைக் கண்டது. பெண்காகத்திற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. பூனையின் அருகே பறந்து சென்றது.



அன்புள்ள பூனையாரே! எனது காகக்குஞ்சுகள் நோயால் வேதனைப்படுகின்றன. உமக்குத் தெரிந்த வைத்தியர் இருந்தால் சொல்வீரா? என்று கவலையோடு கேட்டது.

பூனை சிறிது நேரம் சிந்தித்தது. காகத்தை ஏமாற்றி குஞ்சுகளை உண்பதற்குத திட்டம் தீட்டியது.

அன்புள்ள காக்கையாரே! என்னைப் பற்றி உமக்குத் தெரியாதா? நானும் ஒரு வைத்தியர் தானே. ஆனால் நான் பணம் வாங்குவதில்லை. இலவசமாக வைத்தியம் செய்வதே எனது பணியாகும். எந்த இனத்தவருக்கும் உதவி செய்வேன்.

காக்கையாரே! நீர் விரும்பினால் நானே வைத்தியம் செய்கின்றேன் என்று பூனை நயவஞ்சகமாகக் கூறியது.

பூனையை மரத்தின் மீது ஏறி வருமாறு காகம் அழைத்தது. அந்த நேரம் பார்த்து ஆண்காகம் பறந்து வந்தது. பெண்காகம் வைத்தியப் பூனை பற்றிக் கூறியது.

ஆண் காகத்திற்குக் கோபம் வந்தது. ''பூனை எமது விரோதி. அது நம்மையும், குஞ்சுகளையும் பிடித்துத் தின்று விடும். துன்பம் வந்தால் புத்தியுமா தடுமாறும்? வஞ்சகனிடம் உதவி கேட்கலாமா?'' என்று உரத்துக் கத்தியது.

''நல்லவேளை நீங்கள் உரிய நேரத்தில் வந்தீர்கள். இல்லையென்றால் நானும் எனது குஞ்சுகளும் பூனைக்கு இரையாகி இருப்போம்'' என்றது பெண்காகம்.

பூனை மரத்தில் ஏறிவருவதை பெண்காகம் கண்டது. பூனையைக் கொத்தப் பறந்தது. ஆண்காகமும் அதனுடன் சேர்ந்து கொத்தியது. பூனை தனது நயவஞ்சகம் தெரிந்து விட்டதை உணர்ந்து கொண்டது. உயிர் தப்பினால் போதும் என்று எண்ணியது. தப்பினேன் பிழைத்தேன் என்று மரத்திலிருந்து பாய்ந்து ஓடியது.

ஆண்காகமும் பெண்காகமும் பூனை பாய்ந்து ஓடுவதைப் பார்த்துச் சிரித்தன.

குறிப்பு:
- தெளிவாக உரத்து வாசிக்க வழிப்படுத்துக.
- பாத்திரம் ஏற்று உணர்வு பூர்வமாக வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறி விளக்குக.
  வைத்தியர், இலவசம், நயவஞ்சகம்